பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை, வெளியீடு: ஆசிரியர், நாமக்கல் கவிஞர்.

ஸ்ரீ பியாரிலால்ஜியால் நடத்தப்படும் காந்தியடிகளின் ஆங்கிலப் பத்திரிகையை அனுமதியுடன் தமிழாக்கியது.

9 ] சென்னை—ஞாயிறு, ஜூன் 9, 1946. [ விலை. அணா. 2

## புஸாவால் தாலுகாவில் நடக்கும் ஹரிஜன் வேலை

திரு. தக்கர் பாபா எழுதுகிறார் :—

"புஸாவால் தாலுகாவில் நல்ல முறையில் விரிவாக ஹரிஜன வேலை செய்வதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக மே 14-ம் தேதி இரண்டு கூட்டங்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திரு. வைகுண்டபாய் மேத்தாவும் திரு. கணபதி ராவ் தபஸியும், திரு. பார்வும், திரு. டஸ்டானேயும் நானும் ஆஜரா யிருந்தோம்.

பொதுக் கிணறுகள் அனைத்தையும் ஹரிஜனங்கள் உபயோகிக்குமாறு செய்ய வேண்டும் என்பது எங்கள் நோக்கம். ஜனங்களும் அது விஷயத்தில் உற்சாகமுடையவர்களா யிருக்கிறார்கள். அதனால் வெற்றி கிடைக்குமென்றே நம்புகிறோம். சந்தர்ப்பங்களும் [illegible] செய்வனவாகவே இருக்கின்றன"

பாபா கூறுவது உண்மையே. சந்தர்ப்பங்கள் நல்ல விதமாக இருப்பதாகக் கூறுவது காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்டிருப்பதையே குறிக்கின்றது என்று எண்ணுகிறேன். அதைக் கொண்டு இனிமேல் சீர்திருத்தங்களை ஒப்புக் கொள்ளுமாறு கிராம வாசிகள் நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்று அர்த்தப்படுத்தி கொள்ளவேண்டாம். இத்தகைய விஷயங்களில் நிர்ப்பந்தத்துக்கு இடமே கிடையாது. மதத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஜனங்களின் இரத்தத்தோடு இரத்தமாகக் கலந்து விட்ட தீண்டாமை போன்ற தீமைகளை பலாத்காரத்தின் மூலம் நீக்கிவிட முடியாது. ஆனால் அன்னிய அரசாங்கம் தாழ்த்தப்பட்டவர்களை பலாத்காரத்தால் தாழ்த்துவதற்கே தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்துகின்றது. அது சுயநலமின்றி உதவிசெய்ய முயலும்போதுகூட அதைப் பலாத்காரத்தின் மூலமாகவே செய்கின்றது. காங்கிரஸ் மகா சபை இந்த ஸ்தானத்தைப் பெற்றது பலாத்காரத்தினாலன்று. அது முற்றிலும் ஜன நாயகமான ஸ்தாபனமேயாகும். அதனால் காங்கிரஸ் மந்திரிகள் பொது ஜனங்களுக்கு விஷயத்தை விளக்கிச் சொல்லித் தங்கள் முன்னேற்றமான யோசனைகளுக்கு ஆதரவு தேடுவார்கள் என்றே எண்ணுகின்றேன். இந்த மாதிரிச் செய்தால் ஹரிஜன முன்னேற்றம் போன்ற சீர்திருத்தங்கள் உற்சாகம் பெறும் என்றும் அவைகளுக்கு முட்டுக்கட்டையாக நிற்பவர்கள் தாமாகவே விலகிக் கொள்வார்கள் என்றும் நம்புகிறேன், அத்துடன் புஸாவால் தாலுகா போன்ற குறுகிய இடத்தில் தீவிரமாக வேலை செய்வது அதிகமான பலனைத் தருவதாகும். இந்தியா முழுவதையும் ஏககாலத்தில் சீர்திருத்தி விட முடியாது. ஊழியர்களுக்கு மட்டும் தேவையான திறமையும் செல்வாக்கும் இருக்குமானால் வேலை துரிதமாக நடைபெறும். சிறு இடத்தில் நல்ல விதமாக வேலை செய்வதைப் பிறரும் பின்பற்றுவார்கள். சீக்கிரமாக வெற்றி கிடைக்கவும் செய்யும். புஸாவாலில் ஆரம்பித்திருக்கும் வேலை இந்தவிதமான பயனை அளிக்கும் என்று நம்புகிறேன்.

முஸோரி
29—5—46.

மோ. க. காந்தி.

[ஹரிஜன பந்துவிலிருந்து]

## கேள்வியும் பதிலும்

கேள்வி:—நாள் முழுவதும் வேலை செய்தும் உண்பதற்குப் போதுமான கூலி கிடையாவிட்டால் என் செய்வது?

பதில்:—உழைப்பவன் உழைப்பிற்கேற்ற கூலி பெறுவதற்குத் தகுந்தவனேயாவான். இந்த விதி அனாதிகாலந்தொட்டு வழங்கி வருவதாகும். உபயோகமான வேலை செய்தால் உழைப்பாளி கூலியை ஒரே விதமாகவும் போதுமானதாகவும் பெறவேண்டியவனாவான். அந்த நல்ல காலம் வரும் வரை நாம் செய்யக்கூடியதெல்லாம் உழைப்பாளிக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் போதுமான உணவும் உடையும் கிடைக்குமாறு செய்வதேயாகும். இந்த சொற்ப அளவு காரியங்கூடச் செய்யாத அரசாங்கம் அரசாங்கமே ஆகாது, அராஜகமேயாகும். அத்தகைய நிலைமையை அஹிம்சா முறையில் மாற்ற முயலவேண்டும். தான்யக் கடைகளைக் கொள்ளையடிப்பதும், அட்டூழியங்கள் செய்வதும் அதற்கேற்ற பரிகாரம் ஆகா. அவை அனாவசியமான நஷ்டத்தையும், உயிர்ச் சேதத்தையுமே உண்டாக்கும். அதிகாரிகள் பயந்துபோய் அடிபணிவதா யிருந்தாலும் அதனால் அப்படிச் செய்தவர்களுக்கும் லாபமில்லை, ஜனங்களுக்கும் லாபமில்லை. அராஜகமும் போய்விடாது. சகலமும் முன்னால் நடந்தபடியேதான் நடக்கும். உலகத்தில் நடக்கும் காரியங்களைப் பார்த்தால் நான் கூறுவது சரிதான் என்று தெரியவரும்.

கடைகளில் தான்யங்கள் குவிந்திருந்தும், பட்டினியாக யுள்ளவர்களுக்குக் கிடையாதிருந்தால் அவர்கள் அஹிம்சையோடு கூடிய சத்தியாக்கிரகத்தைச் செய்யலாம். தான்யங்களைப் பலாத்காரமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. உயிர் போகும் வரை உண்ணாவிரத மிருந்து தங்களுக்கும் பிறருக்கும் பரிகாரம் தேடிக்கொள்ளலாம். பொறுமை மட்டும் இருந்தால் நான் கூறும் முறையால் வெற்றி கிடைப்பது நிச்சயம்.

முஸோரி
29—5—46.

மோ. க. காந்தி

(ஹரிஜன பந்துவிலிருந்து)

## அளவுகடந்து புகழ்கூறல்

இராணுவ உத்யோகஸ்தர் ஒருவர் நண்பர் ஒருவருக்கு எழுதுவது :—

"ஜனநாயக தேசங்களில் எல்லாம் அரசியல்வாதிகள் சேனை விஷயத்தில் அறியாமையும் அக்கறையின்மையும் உடையவர்களாக இருக்கிறார்களே என்? சேனையிடமிருந்து அவர்கள் எத்தனையோ விஷயங்களைக் கற்றுக் கொள்ளலாம். மற்ற அரசாங்க வேலையி விருப்பவர்களைவிட சேனையி விருப்பவர்கள் அதிகமான ஸ்தாபனபக்தியுடன் இருப்பதன் காரணத்தைப் பற்றிச் சிந்திப்பது அவசிய மல்லவா? சேனையிலிருப்பவர்கள் மற்றவர்களைவிட அதிகமான கஷ்டங்களும் அபாயங்களும் அனுபவித்துங்கூட இப்படிப் பக்தி யுடையவர்களாக இருப்பதேன்? உங்கள் சேனை சிறப்பானதுதான்; ஆனால் சிறந்தவர்கள் ஏராளமாக உத்யோகஸ்தர்கள் ஆக வந்து சேர்ந்தால் இன்னும் அதிகச் சிறப்புடையதாக ஆகும். தகுந்த உத்யோகஸ்தர்கள் கிடைத்துவிட்டால் போதும், பிறகு உங்கள் சேனையைப் பற்றிச் கவலைப்பட வேண்டியதே யில்லை, உலகத்தில் இணையற்றதாக ஆகிவிடும். அப்படிக்கின்றி உத்யோகஸ்தர்கள் சரியாக இல்லாவிட்டாலும், அரசியலில் கலந்துகொண்டாலும் உங்களுக்குச் செலவுதான் அதிகமாய்விடும். இந்தியாவுக்குக் கஷ்டமான காலம் வரப்போகிறது. சரியான உத்யோகஸ்தர்களை நியமித்து அரசியலையும் மத வித்யாசங்களையும் சேனைக்குள் புகவொட்டாமல் தடுத்துவிட்டால், அந்தக் கஷ்ட காலத்திலும், சீக்கிரத்திலும் ரத்தம் சிந்தாமலும் காரியங்களைச் செய்யக் கூடியது இப்பொழுதுள்ள சேனையேயாகும்."

ஜனநாயக தேசங்களில் எல்லாம் அரசியல்வாதிகள் சேனை விஷயத்தில் அக்கறை கொள்ளவில்லை என்பது உண்மையானால் அது வருந்தத்தக்க காரியமன்று. அவர்கள் தவறான அக்கறை உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதே வருந்தத்தக்க காரியமாகும். ஜனநாயகங்கள் தங்கள் சேனாவீரர்களையே தங்கள் ரட்சகர்களாகக் கருதுகின்றன. அந்த வீரர்கள்தான் செல்வர்களைத் தாங்குகிறார்கள். பிற நாடுகளை ஜெயிக்கிறார்கள். உள்நாட்டில் கலகங்கள் நேராதபடி செய்கிறார்கள். ஆதலால் நாம் விரும்பவேண்டியது யாதெனில் ஜனநாயகம் உண்மையானதாக இருக்க வேண்டுமானால் அது எந்தக் காரியத்துக்காயினும் சேனையை நம்பி வாழ்வதை விட்டுவிடவேண்டும்.

அந்தச் சேனைதான் இந்தியாவுக்குச் சாதித்துள்ள காரியம் யாது? அந்தச் சேனைக்காகப் பரிந்து பேசுகிறாரே, அது எந்த விதத்திலும் இந்தியாவுக்கு நன்மை செய்துவிடவில்லை என்றே கூறுவேன். அது நிரபராதிகளாகவும் நிராயுதபாணிகளாகவுமுள்ள கோடிக் கணக்கான மக்களை அடக்கிவைத்தும் வறுமைப் படுத்தியுமே வந்திருக்கிறது. அதிலுள்ள பிரிட்டிஷ் படையை எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாக அனுப்பி வேறு நல்ல காரியத்தில் ஈடுபடச் செய்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் உலகத்துக்கும் நன்மையாகும். இந்தியப்படைகளை எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாக இதுவரை அழிக்கும் வேலையில் ஈடுபடுத்தியது போலில்லாமல் நிர்மாண ஆக்க வேலையில் ஈடுபடுத்துகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு இந்தியாவில் ஏற்படவேண்டிய ஜனநாயகத்துக்கு நன்மையாகும். சேனைகளின் உதவியால் வாழும் ஜனநாயகம் உண்மையான ஜனநாயகமாகாது. சேனாபலமானது சிந்தனாசக்தி தட்டுத்தடையின்றி வளர்வதைத் தடுத்து விடும். ஆன்மாவையும் அடக்கிவிடும். இந்தியாவிலுள்ள சேனையை மிகவும் திறமை யுடையதாகப் புகழ்கிறார்கள். ஆனால் அந்த "அதிகத் திறமையுள்ள" சேனையின் உதவியால் நடந்துவரும் அன்னிய ஆதிக்கத்தின் காரணத்தினால்தான், பிரிட்டிஷ் மந்திரி கோஷ்டியார் எத்தனை முயற்சி செய்த போதிலும், நீண்டகாலமோ குறுகியகாலமோ உள்நாட்டுச் சண்டை ஏற்பட வேண்டியிருக்கும்போல் தோன்றுகிறது. அத்தகைய சண்டை நிகழ்ந்தால் அப்பொழுதேனும் சேனையிடமுள்ள மோகமெல்லாம் ஒழிந்துபோகும் என்று நம்புகிறேன். கட்டுப்பாடு என்பது சமூக விஷயங்கள் எல்லாவற்றிலுமே இன்றியமையாததாகும். அப்படி யிருக்கக், கட்டுப்பாட்டைத் தனியாகப் பிரித்துச் சேனை என்று வகுத்துவிட்டால் அது வெறும் மிருகமாக்கும் வேலையே யன்றி வேறன்று. இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகும் இப்பொழுதுள்ளது போலவே சேனைக்குச் செலவு செய்ய வேண்டியிருக்குமானால் பட்டினி கிடக்கும் கோடானுகோடி மக்களுக்கு எவ்வித உபகாரமும் செய்ய முடியாது.

மூஸோரி, மோ. க. காந்தி.
30—5—46

## இன்னும் சில யோசனைகள்

உணவுப்பஞ்சம் அநேகர் மனத்தைக்கலக்கி வருவது ஒரு நல்ல சகுனமே, பஞ்சத்தைத் தீர்ப்பதற்கான யோசனைகள் சகல பாகங்களிலிருந்தும் வந்துகொண்டிருக்கின்றன. விஷயம் அறிந்த நண்பர் ஒருவர் எழுதுகிறார் :—

(1) தான்யங்கள் அதிகமாகக் குறைந்துள்ள இந்தச் சமயத்தில் மாம்ச உணவு சாப்பிடக்கூடிய மாம்ச பட்சணிகளுக்கும் சாகபட்சணிகளுக்குக் கொடுக்குமளவே பங்கீடு கொடுக்கவேண்டிய அவசியம் யாது? மாம்ச உணவு சாப்பிட்டு போஷணை பெறக்கூடிய அளவு தான்யத்தைக் குறைத்துக் கொடுக்கலாமல்லவா?

(2) தான்யப் பங்கீட்டளவு குறைக்கப்பட்டிருக்கிறது. அதனால் தேக சிரமப்பட்டு உழைப்பவர்கள் பெருந்தொகையினர் பசியாற்ற முடியாமல் கஷ்டப்படுகிறார்கள், அதற்காக அநேகர் கோதுமையுடன் பருப்பையும் பார்லியையும் சேர்த்து மாவாக்கிக் கொள்கிறார்கள். ஆனால் இவற்றின் விலையோ கோதுமை விலையை விட அதிகமாக இருக்கிறது. அந்த அதிகப்படியான விலையை அவர்களால் கொடுக்க முடியவில்லை. ஆதலால் மாம்ச பட்சணிகளுடைய தான்ய அளவைக் குறைத்து அதற்குப் பதிலாக அவர்களுக்கு தான்யத்தின் விலைக்கே மாம்சம் கிடைக்கும்படியாகச் செய்யவேண்டியது அவசியமாகிறது. அந்தமாதிரிச் செய்தால் அரசாங்கம் 15 கோடி ரூபாய் அதிகமாகச் செலவு செய்ய வேண்டிவரும். ஆனால் மக்களைச்சாகாமல் காப்பாற்றுவதற்கு எந்தத் தொகையும் பெரியதாகாது. உணவுப் பஞ்சத்தால் ஒருகோடிமுதல் ஒன்றரைக் கோடி வரை இறந்துவிடக் கூடும்என்று கூறுகிறார்கள்.

(3) உயிர்க்கொலை என்பது என் மனத்திற்கு அருவருப்பானதுதான். ஆனால் மனிதனைக் கொல்வதா மிருகத்தைக் கொல்வதா என்ற நிலைமை வந்துள்ள இந்தச் சமயத்தில் மிருகத்தைக் கொல்வது தவறாகாது. மான்களும், முயல்களும், பன்றிகளும், புறாக்களும் பயிர்களை நாசம் செய்துவருகின்றன. நான் சாகபட்சணி. ஆனால் மாமிச பட்சணிகள் இந்த மிருகங்களுடைய மாம்சம் நல்ல உணவாகும் என்று கூறுகிறார்கள். ஆதலால் சரியான விதமாக ஏற்பாடுகள் செய்தால் அந்த மிருகங்களைச் சுட்டுக் கொல்லும்படி செய்து அவற்றின் மாம்சத்தை அனேக இடங்களுக்கு, அதிலும் விசேஷமாகப் பெரிய நகரங்களுக்குக் கிடைக்கும்படியாகச் செய்வது கஷ்டமான காரியமானாலும் முடியாத காரியமன்று. அத்துடன் அந்த மிருகங்களால் பயிர்களுக்கு ஏற்படும் சேதமும் குறைந்துபோகும்.

(4) இப்பொழுது நடந்துவரும் பங்கீட்டு முறையில் உணவுப் பொருள்களை மிச்சப்படுத்திப் பஞ்சப் பிரதேசங்களுக்கு அனுப்புவது அநேகர்க்குப் பிடிக்கவில்லை. மிச்சப்படுத்தி என்ன பிரயோஜனம், கள்ள மார்க்கட்டுக்குத் தானே போகும் என்று எண்ணுகிறார்கள். மிச்சப்படுத்தப்படும் தான்யங்களைச் சேகரித்துப் பஞ்சப் பிரதேசத்தார்க்குக் கிடைக்கும்படி செய்யப்படும் என்று நிச்சயமாகத் தெரிந்தால் அது கூட ஜனங்களுக்குத் தைரியத்தை உண்டாக்கும். அதற்கான ஏற்பாடுகளைச் சரியாகச் செய்தால் அதிகமான உணவு மிச்சப்படுத்தப்படும் என்று எண்ணுகிறேன்."

முதல் யோசனையை அதிகாரிகள் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் தான்யப் பங்கீடு முழுவதையும் வாங்கிவரும் மாம்ச பட்சணிகள் ஏற்றுக்கொண்டு நடக்கலாம். அவர்கள் தங்கள் தான்ய உணவைக் குறைத்து மீதியை அவசியப்படுகிறவர்களுக்குக் கொடுக்கலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் பரஸ்பரம் உதவி செய்து கொள்வதே அவசியமானவர்களுக்கு அதிவிரைவாக உதவி செய்யும் மார்க்கமாகும்.

முதல் யோசனையை ஏற்றுக்கொண்டவர்கள் இரண்டாவது யோசனையையும் ஏற்றுக் கொள்வார்கள்.

மூன்றாவது யோசனை தர்க்கத்துக்கு இடமானது. நம்முடைய நாட்டில் எந்த உயிரையும் புனிதமானதாகவே கருதிவருகின்றோம். அப்படி எண்ணுவிட்டாலும்கூட உயிரைக் கொலை செய்ய எல்லோரும் ஒருப்படமாட்டார்கள். ஆதலால் இந்த யோசனையை மாம்சபட்சணிகள் ஏற்றுக்கொள்வது கூடக் கஷ்டம். ஆயினும் சகல உயிரையும் போற்றும் நான்கூட மாம்சபட்சணிகளை இந்த யோசனையை ஏற்று நடக்குமாறு சிபார்சு செய்வேன். தீய ஜந்துக்களைக் கூடக் கொல்லலாகாது என்று கூறும் வாதத்தை "ஹரிஜன பந்து"ப் பத்திரிகையில் உணவுப் பிரச்னையுடன் கலக்காமல் ஆராய எண்ணியிருக்கிறேன்.

அரசாங்கம் திறமை யில்லாமலும் பொறுப்பில்லாமலும் இருப்பதாலும், எங்கு பார்த்தாலும் பஞ்சம் ஆட்சி செய்துகொண்டிருப்பதாலும் நாலாவது யோசனை நல்லதாக யிருந்தாலும் போதுமான பயனை அளிக்கும் என்று தோன்றவில்லை. ஜனங்களுக்குப் பொறுப்புடையதும் தங்களைக் காக்கும் என்று ஜனங்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கக் கூடியதுமான தேசிய சர்க்காரால்தான் அந்த ஊழல்களை ஒழிக்க முடியும். அத்தகைய சர்க்கார் ஏற்படப் போவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஏற்படுவது நிச்சயம் தானே?

முஸோரி,        மோ. க. காந்தி.
29—5—46

## கதர் பிரச்னை

ஒரு கதர் ஊழியர் எழுதுகிறார் :—

"சமீபத்தில் காதி பந்தர் ஒன்றின் மானேஜர் காதிவாங்கவந்த சிலரிடம் பேசிக்கொண்டிருந்ததை எழுதுகின்றேன்.

கேள்வி :—இந்த நூல் தாங்கள் நூற்றதா?

பதில் :— நான் நூற்கவில்லை. இந்த 8 கழி நூலையும் 10 ரூபாய்க்கு வாங்கினேன்.

கேள்வி :—(மற்றொருவரிடம்) இவ்வளவு நூலையும் நீங்கள் நூற்க முடிகிறதா?

பதில் :—இவ்வளவு நூலையும் நான் நூற்கவில்லை. என் குமாரி நூற்றாள். அத்துடன் நாங்கள் கழி 12 அணா வீதம் விற்கவும் செய்கிறோம்.

கேள்வி :—(மூன்றாவது நபரிடம்) நூல் தந்தால் தான் துணி கிடைக்கும்.

பதில் :—பாதகமில்லை. நூல் கிடையாதவரை அத்தாட்சி பெறாத கதரை வாங்கிக்கொள்கிறேன்.

கேள்வி :—(நான்காவது நபரிடம்) ஏன் கதர் வாங்குகிறீர்கள்?

பதில் :-அதுதானே சுலபமாகக் கிடைக்கின்றது.

கேள்வி:-(ஐந்தாவது நபரிடம்)நீங்கள் வழக்கமாகக்கதர் அணிவதில்லையே. எதற்காக வாங்குகிறீர்கள்?

பதில் :—அதுதானே இப்பொழுது நாகரிகமாகக் கருதப்படுகிறது?

கேள்வி :—(ஆறாவது நபரிடம்) நீங்கள் நூற்பதில்லையே, இந்த நூல் ஏது?

பதில் :—எப்பொழுதும் என்னுடைய நண்பர் ஒருவர் தருகிறார்.

கேள்வி :-(ஏழாவது நபரிடம்) எப்பொழுதும்பட்டுக் கதரோ அல்லது ரோமக்கதரோ கட்டுவது ஏன்?

பதில் :—இந்தக் கதருக்கு நூல் கொடுக்க வேண்டாமல்லவா?

கேள்வி :—(எட்டாவது நபரிடம்) நிறைய வாங்கி யிருக்கிறீர்களே. இவ்வளவையும் என்ன செய்யப் போகிறீர்கள்?

பதில் :—இவ்வளவும் இரண்டு மூன்று வருஷத்துக்கு வருமல்லவா? அதன் பிறகு கதர் கிடைக்குமோ கிடையாதோ. அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம் அல்லவா?

இந்தமாதிரி யானவர்களுக்குக் கதர் விற்கலாமா என்று அறிய விரும்புகிறேன்"

இந்தக் கேள்விகளும் பதில்களும் அநேக உண்மைகளைக் கூறுகின்றன. நாம் இப்பொழுது கதர் சம்பந்தமாக அனுஷ்டித்து வரும் புதிய கொள்கை சரியானதாகவும் கதர் வாங்குவோர் மேற்கூறிய விதமாகவும் இருந்தால் அது எதைக் காட்டுகின்றது? காங்கிரஸ் மகாசபையின் விதிகளிலிருந்து கதர் விதியை நீக்கிவிட வேண்டிய அவசியத்தையே காட்டுகின்றது. எட்டுப்பேரிடம் கேள்விகள் கேட்கப்பட்டன என்பதும் குறிப்பிடத் தக்கது. இவர்களில் ஒருவர்க்குக் கூடச் சர்க்கா சங்கம் துணி விற்கவேண்டிய தில்லை. சங்கம் ஏற்பட்டிருப்பது தரித்திரர்களுக்காக மட்டுமே. கதர் அணிபவர்கள் ஏழைகள் நன்மையை உத்தேசித்தோ அல்லது சுயராஜ்யம் தேடுவதற்காகவோ அல்லது இரண்டையும் எண்ணியோதான் கதர் அணியவேண்டும். ஆனால் கேள்விகேட்கப் பெற்ற எட்டுப்பேரும் இவைகளைப்பற்றிச் சிந்திக்கவேயில்லை. சர்க்கா சங்கமானது கதர் லட்சியம் சரியானதுதான் என்று நிரூபிக்க வேண்டுமானால், அதன் ஊழியர்கள் புதிய கொள்கைப்படியேதான் நடக்க வேண்டும். அப்படி நடந்தால் கதர்க் கடைகளை மூடிவிடவேண்டியதாயிருந்தாலும் அதற்கு அஞ்சுதலாகாது. சென்ற காலத்தில் செய்துவிட்ட தவறுகளைத் திருத்துவதற்காக எத்தனைக் கஷ்டங்கள் நேர்ந்தாலும் பொறுத்துக் கொள்வதற்கு அவசியமான ஆற்றலைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மேற்கண்ட சம்பாஷணையானது கதர்க்கடை மானேஜர்களை அதிகமான சிரத்தை யுடையவர்களாக இருக்குமாறு எச்சரிக்கை செய்கின்றது. அவர்கள் கதர் விஞ்ஞான நிபுணர்களாக ஆகி, கதரின் உட்பொருளை வாங்க வருகிறவர்களிடம் பொறுமையுடனும் பணிவுடனும் எடுத்துச் சொல்லத் தயாராக இருக்கவேண்டும். அதற்கு நேரம் செலவாகத்தான் செய்யும், ஆயினும் பயன் தரக்கூடிய காரியமே யாகும். கதர் விஷயத்தில் நம்பிக்கை மட்டும் இருக்குமானால் நாம் மன உறுதியாயிருந்து பிறர்க்கும் நம்முடைய நம்பிக்கையை ஊட்டிவிட முடியும். ஆனால், ஊழியர்களுக்கே நம்பிக்கை இல்லாமற் போகுமானால், கதர் நிலைத்து நிற்கவேமாட்டாது.

சம்பாஷணை சரியாக எழுதப்பட்டதாகவே கருதுகின்றேன்.        மோ. க. காந்தி
முஸோரி, 1—6—46
[ஹரிஜன சேவக்கிலிருந்து]

தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு : ஆசிரியர், நாமக்கல் கவிஞர்.

ஜூன் 9 ஞாயிறு 1946

## அஹிம்சையின் தாத்பரியம்

ஒரு நிருபர் எழுதுகிறார் :—

“மே மாதம் 5-ம் தேதி ஹரிஜனபந்துவில் மனிதர்களுக்குக் கேடு செய்கின்ற புலி சிறுத்தை ஓநாய் பாம்பு தேள் போன்ற ஜந்துக்களைக் கொலை செய்வது அஹிம்சைக்கு விரோதமானதன்று என்று எழுதியிருக்கிறீர்கள்.

நாய் முதலிய ஜந்துக்களுக்கு உணவு கொடுக்கக்கூடாது என்றும் கூறுகிறீர்கள். குஜராத்திகள் மட்டுமின்றி வேறு பலரும் நாய்களுக்கு உணவு கொடுப்பதைப் புண்ணிய காரியமாகவே கருதுகிறார்கள். உணவுப் பஞ்சம் உண்டா யிருக்கும் இந்தச் சமயத்தில் அந்த விதமாக எண்ணுவது தவறாயிருக்கலாம். ஆயினும் இந்த மிருகங்கள் மனிதனுக்கு நிரம்ப உபயோகமாய் இருக்கக் கூடும் என்பதை மறந்துவிடலாகாது. அவைகளுக்கு உணவு கொடுத்து அவைகளை வேலை வாங்கலாம்.

தாங்கள் முன்னால் தர்பன் நகரத்திலிருந்த காலத்தில் திரு. ராமச்சந்திரபாயிடம் 27 கேள்விகள் கேட்டிருக்கிறீர்கள். அவைகளில் ஒன்று பாம்பு கடிக்க வந்தால் செய்யவேண்டியது யாது என்பதாகும். பாம்பைக் கொல்லக்கூடாது என்பதும் கடிக்க வந்தால் கடிக்க விட்டுவிடவேண்டும் என்பதும் அவருடைய மறுமொழி. அப்படி யிருக்கத் தாங்கள் இப்பொழுது வேறு விதமாகக் கூறுகிறீர்களே.”

இதற்கு முன் இது விஷயமாக நான் அதிகமாக எழுதியிருக்கிறேன். நிருபர் குறிப்பிடும் சமயத்தில் எழுந்த பிரச்னை வெறிபிடித்த நாய்களைக் கொல்லுவதேயாகும். அது சம்பந்தமாக அதிகமான விவாதம் நடைபெற்றது. ஆனால் இன்று அதெல்லாம் மறந்துபோய் விட்டதாகவே தோன்றுகிறது.

நான் கூறும் அஹிம்சையானது உயிர்ப்பிராணிகள் அனைத்திடமும் அன்பாயிருப்பது மட்டுமன்று. ஜைனமதமானது மனிதனுடைய உயிரைப்போலவே மற்ற ஜந்துக்களுடைய உயிரும் புனிதமானது என்று வற்புறுத்துவது உண்மையே. ஆனால் அதைக் கொண்டு மனித உயிரைவிட மற்ற ஜந்துக்களின் உயிரே மேலானது என்று அர்த்தப்படுத்த முடியாது. மற்ற ஜந்துக்களின் உயிர் புனிதமானது என்று கூறுவதால் மனிதனுடைய உயிரும் புனிதமானதே என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். மற்ற உயிர்களுடைய புனிதத் தன்மையை அளவு கடந்து வற்புறுத்துவதாகத் தோன்றுகிறது. அந்தக் கருத்தை அனுஷ்டிக்கும் பொழுது அது தவறாக அர்த்தம் செய்யப்பட்டுவிடுகிறது. உதாரணமாக அநேகர் எறும்புகளுக்கு உணவு கொடுப்பதில் பரமானந்தமடைகிறார்கள். இந்தவிதமாக உயிர் புனிதமானது என்னும் கொள்கையானது வெறும் உயிரற்ற சித்தாந்தமாக ஆகிவிட்டது. வேஷம் போடுவதும் திரித்துக் கூறுவதும் மதம் என்னும் பெயரைச் சொல்லிக் கொண்டு செலாவணியாகி வருகின்றன.

அஹிம்சையே தர்மங்கள் அனைத்திலும் உயர்ந்ததாகும். அது வீரர்களுக்காக ஏற்பட்டதேயன்றி கோழைகளுக்காக ஏற்பட்டதன்று. பிறர் கொல்லத் தாம் பயனடைந்து கொண்டு அதே சமயத்தில் தாம் தெய்வ பக்தியுடனும் அஹிம்சையுடனும் நடப்பதாக எண்ணுவது தம்மைத் தாமே ஏமாற்றி கொள்வதேயன்றி வேறன்று.

இந்த மாதிரி அஹிம்சை அனுஷ்டிப்பதாகக் கூறுபவர் புலி தினந்தோறும் வரும் கிராமத்தை விட்டு ஓடி விடுவார். யாரேனும் அதைக் கொன்ற பின்னரே தம்முடைய வீட்டையும் குடும்பத்தையும் காப்பாற்றுவதற்காகத் திரும்பி வருவார். இது அஹிம்சையன்று ; கோழை அனுஷ்டிக்கும் ஹிம்சையேயாகும். புலியைக் கொன்ற மனிதனையாவது ஒரு விதத்தில் வீரத்தைக் காட்டியவனாகக் கூறலாம். அவன் கொன்றதைக் கொண்டு, தான் நன்மை அடையும் மனிதன் வெறும் கோழையே. உண்மையான அஹிம்சைத் தத்துவத்தை அவனால் ஒரு நாளும் அறிந்துகொள்ள முடியாது.

மனிதன் பரிபூரணமாக ஹிம்சையை விட்டுவிட முடியாது. அப்படியானால் எந்த அளவுக்கு ஹிம்சையை அனுஷ்டிக்கலாம் என்ற கேள்வி எழுகின்றது. அந்த அளவு அனைவர்க்கும் ஒன்றுபோல் இருக்கமுடியாது. தத்துவம் ஒன்றாக இருந்தாலும் அதை ஒவ்வொருவரும் தத்தம் முறையிலேயே அனுஷ்டிப்பார்கள். ஒருவனுக்கு உணவாயிருப்பது மற்றொருவனுக்கு விஷமாயிருக்கலாம். நான் மாம்சம் உண்டால் அது பாபமாகும். ஆயினும் மாம்சம் உண்பதைத் தவறாக எண்ணாமல் மாம்சத்தையே உண்டு வாழ்பவர், நான் சாப்பிடாததைப் பார்த்து தாமும் சாப்பிடாதிருப்பாரானால் அவர் பாவம் செய்பவரேயாவார்.

நான் காட்டிலிருந்துகொண்டு விவசாயம் செய்வதானால், காட்டு மிருகங்கள் என்னுடைய வயல்களை அழிப்பதைத் தடுப்பதற்காக எவ்வளவு குறைந்த ஹிம்சையை கையாளலாமோ அவ்வளவையும் கையாளவேண்டி யிருக்கும். என்னுடைய பயிரைச் சேதமாக்கும் குரங்குகளையும் பட்சிகளையும் பூச்சிகளையும் கொல்லவேண்டியவனாவேன். நானாகவே அவைகளைக் கொல்ல முடியாவிட்டால் அதற்காக வேறு ஆட்களை நியமிக்க வேண்டியவனாவேன். இரண்டுக்கும் வித்தியாசம் கிடையாது.

பஞ்சம் உண்டாயிருக்கும் சமயத்தில் அஹிம்சை என்று சொல்லிக்கொண்டு பயிர்களுக்குச் சேதம் செய்யும் மிருகங்களைக் கொல்லாதிருப்பது பாவமே என்பதில் சந்தேகமில்லை. நன்மையும் தீமையும் எப்போதும் ஒரே மாதிரியானவை யல்ல. சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு மாறிக்கொண்டேவரும்.

சில சந்தர்ப்பங்களில் நன்மையா யிருப்பது அந்தச் சந்தர்ப்பம் மாறி வேறு விதமாக ஆகும்போது தீமையாகவோ பாவமாகவோ மாறிவிடுகின்றது.

மனிதன் சாஸ்திரங்கள் என்னும் குட்டையில் ஆழ்ந்து விடாமல் சமுத்திரத்தில் மூழ்கி முத்துக் குளிக்க வேண்டியவனாவான். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலுங் எது அஹிம்சை, எது ஹிம்சை என்று ஆராய்ந்து பார்த்தே காரியங்களைச் செய்தல் வேண்டும். இப்படிச் செய்வது கோழைத்தனமாகாது. வெட்கப்பட வேண்டியதுமில்லை. வீரன்தான் கடவுளை அடைய முடியும். கோழையால் ஒருநாளும் முடியாது என்று கவிஞர் கூறுகின்றார்,

ராமச்சந்திரபாய் எனக்குக் கூறிய யோசனை யாதெனில் நான் தைரிய முடையவனாகவும் கடவுளை நேரில் தரிசிக்க வேண்டுமென்ற விருப்பமுடையவனாகவுமிருந்தால் பாம்பைக் கொல்லாமல் கடிக்கும்படி விட்டுவிட வேண்டுமென்பதேயாகும். நான் பாம்புகளை கடிதம் பெறுவதற்கு முன்பும் கொன்றதில்லை. பின்பும் கொன்றதில்லை. அதனால் எனக்கு

எவ்விதப் பெருமையும் உண்டாய்விடவில்லை. பாம்புகளுடனும் தேள்களுடனும் பயமில்லாமல் விளையாடவேண்டும் என்பதே என்னுடைய லட்சியம். ஆனால் இந்நாள்வரை அது வெறும் ஆசையாக மட்டுமே இருந்து வருகிறது. அது நிறைவேறுமோ நிறைவேறாதோ, அப்படி நிறைவேறுவதாயிருந்தாலும் எப்பொழுது நிறைவேறுமோ அறியேன். என்னுடன் இருப்பவர்கள் கொன்றுவருவதை நான் தடுப்பதில்லை. இஷ்டப்பட்டால் தடுத்திருக்கலாம். ஆனால் அது எனக்கு எப்படிச் சாத்தியமாகும்? எனக்கு இன்னும் அவைகளைக் கையில் எடுத்துக் கொள்ளும் தைரியம் உண்டாகவில்லையே. அது உண்டானால் அல்லவோ அவர்களுக்கு அஞ்சாமையை ஊட்ட முடியும்? அப்படிச் செய்ய முடியாதிருப்பது எனக்கு வெட்கமாயிருக்கிறது. ஆனால் வெட்கப்பட்டுப் பிரயோஜனம் என்ன?

ராமநாமம் கைகூடுமானால் அத்தகைய தைரியத்தையும் அடைந்துவிடுவேன். அதுவரை மேலே கூறியவண்ணம் நடப்பதையே என் கடமையாகக் கருதுகின்றேன். அனுஷ்டிப்பதுதான் மதமேயன்றி வேஷம் போடுவதன்று.

முஸோரி, மோ. க. காந்தி
29—5—46

[ஹரிஜன சேவக்கிலிருந்து]

## இதுவும் மந்திர சிகிச்சையா?

ஒரு நண்பர் வேடிக்கையாகக் கேலி செய்து எழுதுவது :—

“தாங்கள் 17-3-46 ஹரிஜன் பத்திரிகையில் இயற்கைச் சிகிச்சை பற்றி எழுதியிருந்த கட்டுரையை வாசித்தேன். சாதாரணமாக ‘நம்பிக்கைச் சிகிச்சை’ என்று கூறுகிறார்களே, அதற்கும் இயற்கைச் சிகிச்சைக்கும் ஏதேனும் நெருங்கிய சம்பந்தமுண்டா என்று அறிய விரும்புகிறேன். எந்தச் சிகிச்சையானாலும், செய்யப்படும் சிகிச்சை பயன் தர வேண்டுமானால் அதில் நம்பிக்கையிருக்க வேண்டியது அவசியமே. ஆனால் வைசூரி, குன்மம்போன்ற நோய்களுக்கு மருந்து கொடாமல் வெறும் நம்பிக்கையை மட்டும் ஆதாரமாகக் கொண்ட சிகிச்சை முறைகள் கையாளப் படுவதை அறிவீர்கள். வைசூரிசைக் குணப்படுத்துவதற்கு—முக்கியமாகத் தென் இந்தியாவில்—இறைவனுடைய லீலை என்று எண்ணி எவ்விதசிகிச்சையும் செய்வதில்லை. மாரியம்மனுக்குப் பூஜை போடுவார்கள். அநேக சமயங்களில் நோய் மாயமாக மறைந்துவிடவும் செய்கிறது. நாட்பட்ட குன்ம நோய்களின் நிவாரணத்தைக் கோரி திருப்பதியிலுள்ள தெய்வத்துக்கு நேர்ந்து கொள்கிறார்கள். நோய் குணமானதும் நேர்த்திக் கடனைச் செலுத்தி விடுகிறார்கள். என்னுடைய தாயாருக்கு அந்த விதமான வலி இருந்தது, திருப்பதிக்குப் போய் வந்த பிறகு அது இல்லாமற் போய் விட்டது.

இந்த விஷயத்தின் ரகசியத்தை அறிய விரும்புகிறேன். இயற்கைச் சிகிச்சை முறையினிடமும் இதே மாதிரியான நம்பிக்கையை வைத்தால் டாக்டர்களுக்குத் திரும்பத் திரும்பக் கொடுக்கும் செலவுகள் குறைந்து போகுமல்லவா? டாக்டர்கள் நோயாளிகளாகவே வைத்திருப்பதற்காக மருந்து சேர்த்துக் கொடுக்கும் பலருடன் சதியாலோசனை செய்வதாக ஆங்கிலப் பழங் கவிஞர் சாஸர் என்பவர்கூறுவது சரிதானே?”

மேற் கூறிய சிகிச்சை முறைகள் இயற்கை முறையுமன்று, அதில் நான் சேர்த்துள்ள ராமநாம சிகிச்சையுமன்று. ஆயினும் அவை, அநேக சந்தர்ப்பங்களில் இயற்கையானது எவ்வித சிகிச்சையுமின்றி நோயைக் குணப்படுத்துகின்றது என்பதையே காட்டுகின்றன. இந்திய மக்களிடம் எவ்வளவு தூரம் மூட நம்பிக்கை வேரூன்றியிருக்கிறது என்பதையும் அவை தெளிவாகக் காட்டுகின்றன. இயற்கை வைத்தியத்தின் நடு நாயகமாக விளங்கும் ராமநாமம் மூட நம்பிக்கையின் பகைவனாகும். அதர்மத்துக்கு அஞ்சாதவர் இதர முறைகளைத் தங்கள் நலனுக்காகத் தவறான முறையில் உபயோகித்துக் கொள்வது போலவே ராமநாமத்தையும் உபயோகித்துக் கொள்வார்கள். வாயால்மட்டும்ராமநாம பஜனை செய்வதால் எவ்விதமான குணமும் உண்டாகாது. நண்பர் கூறுகிற நம்பிக்கைச் சிகிச்சையெல்லாம் அறிவில்லாமற் செய்யும் குருட்டுச் சிகிச்சையேயாகும், அதனால் அது கடவுளுடைய நாமத்தை இழிவே செய்கின்றது. கடவுள் நாமம் என்பது வெறும் கற்பனையான காரியமன்று. அது உள்ளத்தினின்றே உதிக்க வேண்டும். கடவுளிடமும் அவருடைய தர்ம நீதியிலும் பரிபூரணமான நம்பிக்கை உடைமையே வேறு எவ்விதமான உதவியுமின்றி நோயைப் பரிபூரணமாகக் குணப்படுத்துவதாகும். பரிபூரணமான மனமே பரிபூரணமான ஆரோக்கியம் தரவல்லது என்பதே கடவுள் நீதி. பரிபூரணமான மனம் என்பது பரிபூரணமான இதயத்தினாலேயே உருவாகும். அத்தகைய இதயம் டாக்டர்கள் குழாய் வைத்துக் காணும் இதயமன்று, இறைவன் கோயில் கொண்டுள்ள இதயமேயாகும். கடவுளை இதயத்தில் காண்பவருடைய மனத்தில் எந்தவிதமான மாசுற்ற எண்ணங்களும் எழமாட்டா. எண்ணம் தூயதாயிருந்தால் நோய் உண்டாக முடியாது. அந்தவிதமான தூய உள்ளம் படைப்பது கஷ்டமான காரியம்தான். ஆனால் அந்தவிதமான உள்ளம் வேண்டியதின் அவசியத்தை உணர்வதே முற்படியாகும். அதற்கேற்ற காரியம் செய்யப் புகுவதே அடுத்தபடியாகும். இந்த விதமாக வாழ்க்கை முறையின் அடிப்படையில் மாறுதல் செய்தால், செய்து கொள்பவன் அதே காலத்தில் இது வரை மனிதன் கண்டுள்ள சகல சுகாதார விதிகளையும் அனுஷ்டித்து வருவான். அந்த விதிகளை அனுஷ்டியாமலே தூய உள்ளம படைத்து விட்டதாகக் கூற முடியாது. தூய உள்ளம் போதும், ராம நாயம் கூடத் தேவையில்லை என்று கூறினால் கூடத் தவறாகாது. ஆனால் நான் உள்ளத் தூய்மை அடைவதற்கு அதைத் தவிர வேறு வழியை அறியேன். அதுதான் உலக முழுவதிலும் பண்டைக் கால முதல் பெரியோர்கள் அனுஷ்டித்து வந்த வழியாகும். அவர்கள் எல்லோரும் மூட நம்பிக்கை கொண்டவர்களுமல்லர், மந்திர வாதம் செய்து பிழைத்தவருமல்லர், கடவுள் அடியார்களேயாவர்.

“கிறிஸ்தவ விஞ்ஞானம்” என்று கூறும் நம்பிக்கைச் சிகிச்சை முறையும் இதுதான் என்று கூறப்படுமானால் எனக்கு எவ்வித ஆட்சேபமும் கிடையாது. ராமநாமமும் நான் புதிதாகக் கண்டு பிடித்ததன்று, அது கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்னாலேயேயுள்ள முறையாகும்.

சத்திர சிகிச்சை வேண்டியுள்ள சமயத்திலும் ராமநாம பஜனை பயன்படுமா என்று கேட்கிறார்கள். பயன் படாது என்பதில் சந்தேகமில்லை. அது வெட்டுப்பட்டுப் போன காலைச் சேர்த்து விடாது. ஆனால் அநேக சந்தர்ப்பங்களில் சத்திர சிகிச்சைக்கு அவசியமே கிடையாது. அவசியமுள்ள சமயங்களில் செய்ய வேண்டியது அவசியமே, ஆயினும் தெய்வ பக்தியுடையவர்கள் உறுப்பு இழந்தாலும் சஞ்சலப் படமாட்டார்கள். ராமநாம பஜனை என்பது இந்தச் சிகிச்சையையும் செய்து பார்ப்போமே என்று பரீட்சை பார்க்கும் சிசிச்சையன்று.

முஸோரி, மோ. க. காந்தி.
30—5—46

## லட்சியப் பெண்

மூவாயிரம் வருடங்கட்கு முன் பாலஸ்தீனத்திலிருந்த ஸாலமோன் என்னும் ஹீப்ரு அரசர் லட்சியப் பெண்ணை வர்ணித்துப் பாடியிருக்கும் பாடல் வருமாறு :—

கற்புடைய பெண்ணைக் காண்பது கஷ்டம். அவள் நவரத்னங்களையும் விடச் சிறந்தவளாவாள்.

கணவனுடைய இதய முழுவதும் அவளை நம்பும், அதனால் அவள் அடையும் பயன் அளவற்றதாகும்.

அவள் வாழ்நாள் முழுவதும் அவனுக்கு நன்மையே நாடுவாள். கனவிலும் தீமையைக் கருதாள்.

அவள் சணலையும் ரோமத்தையும் கொண்டு நூல் நூற்பாள். துணி நெய்வாள்.

அவள் வியாபாரக் கப்பல்கள் போன்று அயலிடங்களிலிருந்து உணவு தருவிப்பாள்.

அவள் விடியுமுன் எழுந்து வீட்டுக்காரியங்களைப் பார்ப்பாள், பணிப் பெண்ணுக்கு பணியைப் பகிர்ந்து கொடுப்பாள்.

தான் தேடும் பணத்தைக் கொண்டு வயல் வாங்கித் திராட்சைத் தோட்டம் போடுவாள்.

தன்னுடைய உடம்பையும் உறுப்புக்களையும் உரமுடையதாக ஆக்குவாள்.

தான் உண்டாக்கும் பொருள்கள் லாபம் தருவனவாயிருப்பதைக் கண்டு இரவானாலும்கூட உறங்காமல் நூல் நூற்பாள்.

ஏழை எளியவர்கட்கு வேண்டியதைத் தாராளமாக வழங்குவாள்.

பனிக்காலத்துக்குப் பயப்படமாட்டாள். வீட்டிலுள்ளார் அனைவர்க்கும் செந்நிற உடைகள் தருவாள், தனக்கு அழகான உடைகள் தயாரித்துக் கொள்வாள். மூத்தோர் சபையில் உட்கார்ந்திருக்கும் போது அழகாயிருக்கும் பொருட்டு கணவனுக்குக் கண்ணைக் கவரும் உடைகள் அளிப்பாள்.

அவள் அழகான உடைகள் செய்து விற்பாள். அரைக் கச்சைகள் செய்து வியாபாரிகளிடம் கொடுப்பாள். அவள் தரும் உடைகள் நல்லதாயும் உறுதியாயுமிருக்கும்.

அவள் எது பேசினாலும் அறிவு நிறைந்ததாயிருக்கும். அன்பே அவளுடைய நாவில் நர்த்தனம் செய்யும்.

அவள் எப்போதும் வீட்டுக் காரியங்களிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பாள். ஒரு நிமிஷங்கூடச் சோம்பலாயிருக்க மாட்டாள்.

அவளுடைய மக்கள் அவளை வாழ்த்துவார்கள். அவளுடைய கணவன் ' எத்தனையோ கற்புடைய மங்கையர் தோன்றியுளர், ஆயினும் நீயே அவர்களில் தலைசிறந்தவள் ' என்று புகழ்வான்.

அழகும் அந்தமும் அழிந்து போகும், நிலைத்து நிற்கா. ஆனால் தெய்வத்துக்கு அஞ்சி ஒழுகும் பெண்ணே புகழுக்குரியவள் ஆவாள்.

அவளுடைய உழைப்பின் பலனை அவளிடம் கொடுங்கள். அவளுடைய உழைப்பு அவளை ஊர் முழுவதும் புகழட்டும்.

இந்த மாதிரியானவர்ணனை இந்திய நூல்களிலும் காணப்படுகின்றது. அந்தக் காலத்தில் பெண்களும் ஆண்களைப் போலவே திறமையுடனும் சாமர்த்தியத்துடனும் வேலை செய்து குடும்ப பாரத்தைக் கணவருடன் சரிசமமாக வகித்து வாழ்வைப் பயனுடையதாகச் செய்து வந்தார்கள் என்று தோன்றுகிறது. இந்த உபதேசம் ஏழைகளுக்காகக் கூறப்பட்டதன்று, பணக்காரர்களுக்காகவே கூறப்பட்டதாகும். எதுவாயினும் சரி, இந்தப் பாடல் கூறும் லட்சியப்படி இந்தக் காலத்துப் பெண்களும் நடக்கலாம். அந்தப் பாடல்கூறும் பெண்ணின் தைரியமும் பல விதமான வேலைகளும் வீட்டிலும் சமூகத்திலும் அவளுக்குரிய ஸ்தானமும் இந்தக் காலத்தில் கீழ்நாடுகளிலுள்ள பெண்களிடம் காணப்படாமல் மறைந்து போய்விட்டன. வீட்டைக் காப்பாற்றி வந்த பெண் இப்பொழுது பிறரைச் சார்ந்து பிழைப்பவளாக ஆகிவிட்டாள். அவள் தன்னுடைய வாழ்வாகிய துணி கிழிந்து போவதைச் சீர் செய்வதற்காக மறுபடியும் கைராட்டினத்தைக்கைக்கொள்ளவேண்டிய காலம் வந்து விட்டது. அந்த ஞானி கூறுகிறபடியே இந்தியப் பெண்கள் நடக்க முடியுமானால் தங்கள் தேசத்தை மட்டுமின்றி உலகத்தையுங் கூட புனருத்தாரணம் செய்து விடுவார்கள் என்பது நிச்சயம். புதிய உலகத்தில் தம்முடைய ஸ்தானத்தை வகிக்கத் தக்க தகுதியைப் பெற முயலாதவர்கள் புதிய உலகம் சிருஷ்டிக்கப் போவதாகத் திட்டம் போட ஆரம்பிப்பதில் பிரயோஜனமே கிடையாது.

முஸோரி, ஏ. கே.
29—5—46

## வாரக் கடிதம்

### இ. தே. ரா. வீரரின் திகைப்பு

காந்தியடிகள் டில்லியில் தங்கியிருந்தபொழுது இ. தே. ரா. வீரர் சுமார் 50 பேர் அவரிடம் வந்து பேசிக் கொண்டிருந்தார்கள். குருதேவர் பாடியுள்ள,

ஜனகண மன அதி நாயக
ஜயஹே
பாரத பாக்கிய விதாதா

என்று தொடங்கும் பாடலைத் தழுவி இயற்றப்பட்டுள்ள ஹிந்துஸ்தானிப் பாடலை அவர்கள் முதலில் ஒன்று சேர்ந்து பாடினார்கள். அவர்கள் தங்கள் கதி என்ன ஆகுமோ என்று பயந்து கொண்டு காபூல் முகாமில் முட் கம்பி வேலிக்குப் பின்னால் நின்று காந்தியடிகளை வரவேற்ற பொழுதும் இதே பாடலைத்தான் பாடினார்கள். அவர்கள் பாடலைப் பாடி முடித்ததும் காந்தியடிகள் ஹிந்துஸ்தானியில் சில மொழிகள் பகர்ந்தார் :—

" நீங்களும் என்ன செய்வது என்று திகைத்து நிற்பதாகச் சில நண்பர்கள் என்னிடம் கூறினார்கள். அஹிம்சா முறையில் சுயராஜ்யம் தேடுவதே காங்கிரஸின் கொள்கை என்பதை அறிவீர்கள். ஆயினும் காங்கிரஸுக்கு வெளியே மட்டுமன்றி உள்ளேயும் பலர் காங்கிரஸின் கொள்கையானது தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றி விட்டபடியால் இப்பொழுது நிமிஷத்துக்கு நிமிஷம் மாறி வரும் புது நிலைமையில் ஆகவேண்டிய காரியங்களுக்கு உபயோகப் படாததாக ஆகிவிட வில்லையா என்று சந்தேகிக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

நீங்கள் சுபாஷ் பாபுவின் தலைமையில் யுத்த களத்தில் போர்த் திறமையைக் காட்டி விட்ட சூரர்கள். வெற்றியும் தோல்வியும் நம் வசமில்லை. கடவுள் வசமே உள்ளது. நேதாஜி உங்களிடம் விடை பெற்றுக் கொள்ளும் பொழுது நீங்கள் இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றதும் காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கு அடங்கி அதன் கொள்கைப்படியே நடக்க வேண்டும் என்று கூறினார். உங்களுடைய நோக்கம் ஜப்பானியர்க்கு உதவி செய்வதன்று, இந்தியாவை விடுவிப்பது மட்டுமே என்று கூறுகிறீர்கள். பிரிட்டிஷாரைத் தோல்வியுறச் செய்யவேண்டும் என்று விரும்பிய உங்கள் நோக்கம் நிறைவேறாமல் போய்விட்டது. ஆயினும் தேசம் முழுவதும் உற்சாகமான எழுச்சி பெற்று விட்டதும், சேனையிலுள்ளவர்களுங்கூட அரசியல் விழிப்புப் பெறவும்

சுயேச்சை பெற வேண்டும் என்று எண்ணவும் ஆரம்பித்து விட்டதும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும். நீங்கள் இந்துக்கள், முஸ்லிம்கள், பார்ஸிகள், கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள், சீக்கியர்கள் ஆகிய உங்கள் வீரர்கள் அவ்வளவு பேரையும் ஒரே ஐக்கியமாக ஆக்கி விட்டீர்கள். அது ஒரு சாதாரணமான காரியமன்று. நீங்கள் சுதந்திர நிலைமையில் சாதித்த அந்தக் காரியத்தை இங்குள்ள அடிமை நிலைமையிலும் சாதிக்க வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். அதுதான் உங்களைப் பரீட்சிக்கும் முறையாகும்.

நீங்கள் அஹிம்சா தர்மத்தை நன்றாக ஏற்றுக் கொண்டிருந்தால் இங்குங் கூட நீங்கள் சுதந்திர புருஷர்களாகவே எண்ணிக் கொள்வீர்கள். உதாரணமாக சுதந்திரம் அடைந்து விட்டதாக எண்ணும் மக்களைத் தங்கள் விருப்பத்துக்கு வணங்குமாறு எந்த சர்க்காராலும் செய்ய முடியாது. சர்க்கார் அவர்களைக் கொல்வதாகப் பயமுறுத்தினால் அவர்கள் கொல்லுங்கள் என்று தங்கள் கழுத்தைக் காட்டுவார்களே யன்றி அடி பணிய மட்டும் செய்யமாட்டார்கள். அநேகமாகக் கொல்ல வரும் போர் வீரர்கள் கூட இப்படி வேண்டுமென்று செய்யும் கொலையைச் செய்ய மறுத்துவிடக் கூடச் செய்யலாம். அப்படிக்கின்றி அவர்கள் சாக நேர்ந்தாலும் சுதந்திர புருஷர்களாகவே சாவார்கள். ஒருவரும் அடிமைகளா யிருக்கமாட்டார்கள். நீங்கள் எல்லோருமே சுதந்திரம் அடைந்து விட்டதாக எண்ணி விடுவீர்களானால் இந்தியா முழுவதுமே சுதந்திரம் அடைந்து விடும். அவர்கள் உங்களைச் சிறையிடலாம். நீங்கள் அதை வரவேற்கவோ அல்லது உங்கள் பிணத்தை மட்டுமே சிறை யிட முடியும் என்று சொல்லவோ செய்யலாம். அஹிம்சாவீரர்கள் இந்த இரண்டு விதத்திலும் நடந்து கொள்ளலாம். இரண்டு விதத்துக்கும் இணையற்ற வீரம் வேண்டியதேயாகும். நம்முடைய வேலை முழுவதும் இந்தியாவிலுள்ள 40 கோடி மக்களுடைய மனத்திலும் புத்துயிர் உண்டாக்குவதே யாகும். அவர்களுடைய இதயத்திலிருந்து அச்சத்தை அகற்றிவிட வேண்டும். என்று அவர்கள் அச்சத்தைத் துறந்து விடுகிறார்களோ அன்றே இந்தியாவின் விலங்குகளும் வீழ்ந்து போகும்.

அநேக வருஷங்கட்கு முன் நான் நங்கானா சாகேப் என்னும் ஊரில்—"சீக்கியர்கள் தங்கள் போர் வீரத்தை நிரூபித்து விட்டார்கள். ஆயினும் அவர்கள் தங்கள் வாளுக்குப் பதிலாக அஹிம்சா தர்மத்தைக் கைக் கொண்டால்தான் குரு கோவிந்த சிங்கருடைய லட்சியம் கைகூடும்" என்று சொன்னேன்.

வாளை வைத்திருக்க எண்ணும் வரை, அச்சத்தைத் துறந்துவிட முடியாது. அஹிம்ஸா வாளை ஏந்தினால் யாருமே உங்களை அடக்கிவிட முடியாது. அது வென்றவனையும் தோற்றவனையும் மேன்மைப் படுத்தும். நேத்தாஜீ உங்களுக்குப் புதிய உணர்ச்சி ஊட்டி யிருக்கிறார். அந்த உணர்ச்சி அஹிம்சை மூலமேதான் உயிருட னிருக்க முடியும்."

இந்த விதமாக அஹிம்சைக்கும் ராணுவ வீரத்துக்குமுள்ள சம்பந்தத்தை விளக்கிய பின், காந்தியடிகள் சுயமரியாதையுள்ள லட்சியப் பிரஜையாக விரும்பும் சத்தியாக்கிரக வீரத்துக்கு வேண்டிய உன்னதமான மனோ தைரியத்தைக் குறித்துப் பேசலானார் :—

"எல்லாவற்றிற்கும் மேலாக நீங்கள் பிச்சை எடுக்கவும் கூடாது, பிறரை அண்டிப் பிழைக்கவும் கூடாது. நீங்கள் இந்தியாவுக்காக உங்கள் உயிரைத் துறக்க தயாராக இருந்ததற்காகவும், இம்பால் முனையில் போர் புரிந்ததற்காகவும் எவ்வித உதவியையும் எதிர்பார்க்கக் கூடாது. எதிர்பார்த்தால் உங்கள் மேன்மையை எல்லாம் இழந்து விடுவீர்கள். சுவையை யிழந்த உப்பால் யாது பயன்? நீங்கள் வேலை செய்து ஜீவனம் செய்ய விரும்பவேண்டுமே யன்றி பிச்சை எடுக்கவும் தானம் ஏற்கவும் மறுத்து விடவேண்டும். சுருங்கச் சொல்லின் நீங்கள் ஆயுதங்களை உபயோகிப்பதில் வீரத்தையும் தைரியத்தையும் காட்டியது போலவே அஹிம்சையை அனுஷ்டிப்பதிலும் காட்ட வேண்டும்.

உங்களுக்கு நிலம் தேவையானால் கிடைக்கும். நீங்கள் அதை வெட்டித் திருத்தி, பிறர்பார்த்து அது போல் செய்யக்கூடிய வண்ணம் நல்ல மாதிரியாக விவசாயம் செய்யுங்கள். நம்முடைய மக்கள் பல நூற்றாண்டுகளாக சோம்பலில் மூழ்கிவிட்டார்கள். அவர்களை அதிலிருந்து கறையேற்றவேண்டும். நீங்கள் உங்கள் சுருசுருப்பாலும் உழைப்பாலுமே அதைச் செய்ய முடியும். நீங்கள் வாளியையும் வாரியலையும் திறமையுடன் உபயோகிக்கவும் கக்கூசுகளைச் சுத்தம் செய்வதை அசங்கியம் என்றோ அகௌரவம் என்றோ கருதாதிருக்கவும் கற்றுக் கொள்ளவேண்டும். இந்த வேலையில் பட்டம் பெறுவதே "விக்டோரியா கிராஸ்" என்னும் வீரப்பதக்கம் பெறுவதைவிடச் சிலாக்கியமாகும்.

அதன்பின் இ. தே. ரா. வீரர்கள் கேள்விகள் கேட்டார்கள். காந்தியடிகள் பதில் சொன்னார்.

கேள்வி :—வாழ்நாள் முழுவதும் வாள்வந்திப் போர் புரிந்தவன் அஹிம்சையை வெற்றியுறக் கையாள்வது எப்படி? இரண்டும் பரஸ்பரம் முரண்பாடு உடையவை அல்லவா?

பதில் :—முரண்பாடு கிடையாது. பாதுஷா கான் என்பவர் ஒரு பட்டாணி யாவார். ஆயினும் இன்று அவர் ஒரு அஹிம்சா வீரனாக விளங்குகிறார். டால்ஸ்டாயுங்கூட இராணுவத்தில் சேவகம் செய்தவரே. அவரேதான் ஐரோப்பாவுக்கு அஹிம்சையை உபதேசித்த குருமூர்த்தியாவார். நாம் இன்னும் அஹிம்சையில் அடங்கியுள்ள ஆற்றல் அனைத்தையும் உணர்ந்துகொள்ள வில்லை. சர்க்கார் என்னை 1942-ல் கைதி செய்யாதிருந்தால் நான் ஜப்பானை அஹிம்சையைக் கொண்டு வெல்வதற்கான வழியைக் காட்டியிருப்பேன்.

கேள்வி :—தற்காப்புக்காக வாளை உபயோகிப்பது அஹிம்சைக்கு விரோதமில்லை என்று நினைக்கிறேன்.

பதில் :—வேவலும் ஆர்க்கின்லெக்கும் மட்டுமன்று, ஹிட்லருங்கூடவாளை அவசியமில்லாமல் உபயோகிப்பதில்லை. ஆயினும் அதனால் அதை அஹிம்சையாக எண்ணிவிட முடியாது. எந்தவிதமான காரண மிருந்தாலும் ஹிம்சையே யாகும்.

கேள்வி :—தாங்கள் அஹிம்சையைக் கைக் கொண்டால் உலகமும் கைக்கொள்ள வேண்டாமா?

பதில் :—இந்த விஷயத்திலும் நான் உங்கள் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. சீர்திருத்தவாதி ஜனங்கள் போக்குப்படி நடந்து கொள்ள முடியாது. அநேக சமயங்களில் உயிர் துறக்க நேர்ந்தாலுங்கூட ஜனங்களுடைய போக்கை எதிர்க்கவே வேண்டியிருக்கும். ஜனங்கள் அறியாமல் செய்யும் கரகோஷத்தைக் கேட்டு மதிமயங்கி விடலாகாது. நீங்கள் தேசத்துக்குச் செய்யவேண்டிய பிரதானமான சேவை யாதெனில் வாளை

உபயோகிக்கக் கற்றுக்கொடுப்பதன்று, வாளைக் கண்டு பயப்படாமல் இருக்கக் கற்றுக்கொடுப்பதே யாகும்.

கேள்வி :—சுபாஷ் பாபு ஜெயித்திருந்தால் தாங்கள் என்ன செய்வீர்கள்.

பதில் :—ஆயுதங்களைக் களைந்து என்முன் அடுக்கி வைக்கும்படி உங்கட்குச் சொல்லுமாறு அவரிடம் வேண்டிக்கொள்வேன்.

மூஸோரி, பியாரிலால்.
1—6—46.

## உருலி சிகிச்சைசாலை

உருலி சிகிச்சை சாலையிலுள்ள என்னுடைய சகா ஊழியர்கள் சிகிச்சை பெறுவதற்காக நோயாளிகள் வெகு தூரத்திலிருந்து வந்துகொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த சிகிச்சை சாலையில் தங்குவதற்கு இன்னும் யாருக்குமே அறைகள் தயாராகவில்லை என்று ஏற்கனவே "ஹரிஜன சேவக்" பத்திரிகையில் எழுதியிருக்கிறேன். ஏதோ கொஞ்சம் நிலம் கிடைத்திருக்கிறதாம், ஆனாலும் இனிமேல்தான் குடிசைகள் கட்டவேண்டும். அத்துடன் வெளியூரிலிருந்து வரும் நோயாளிகள் தங்குவதற்கு வேண்டிய வீடுகள் உருலி கிராமத்தில் கிடையா. அப்படிக் கிடைத்தாலும் நான் கிராமத்தை நகரமாக ஆக்கிவிட விரும்பவில்லை. எங்களுடைய லட்சியம் யாதெனில் ஒவ்வொரு கிராமத்திலும் பாடசாலை ஒன்று இருப்பது அவசியமாவது போலவே சிகிச்சை சாலை ஒன்று ஏற்படுத்துவதேயாகும்.

உருலி சிகிச்சை சாலையிலுள்ள என்னுடைய சகா ஊழியர்கள் கடிதப் போக்குவரத்து மூலமாக நோயாளிகளுக்கு சிகிச்சை செய்ய முடியாதவர்களாயிருப்பதை மறந்துவிடக் கூடாது. வெகு தூரத்திலுள்ள நோயாளிகள் தாங்கள்ாகவே தங்களுக்கு இயற்கைச் சிகிச்சையைச் செய்துகொள்ளலாம். தம்முடைய வீட்டிலேயேயிருந்துகொண்டு ராமநாம பஜனையை யார்தான் செய்ய முடியாது? அதுபோலவே தண்ணீரில் உட்கார்வது போன்ற இயற்கை சிகிச்சைகளையும் வீட்டிலேயே செய்துகொள்ள முடியும்.

மூஸோரி, மோ. க. காந்தி
2—6—46
[ஹரிஜன சேவக்கிலிருந்து]

## மந்திரிகள் சம்பளம்

நான் ஹரிஜன் பத்திரிகையில் மந்திரிகளின் சம்பளத்தைக் கூட்டுவதைப்பற்றி எழுதியது குறித்து அநேகர் நீண்ட கடிதங்கள் எழுதி என்னுடைய அபிப்பிராயத்தைப் புனராலோசனை செய்யுமாறு கேட்டிருக்கிறார்கள். ஏழைகளான வாயிற் சேவரும் குமஸ்தாக்களும் போதுமான சம்பள உயர்வு பெறாதிருக்கும்போது மந்திரிகள் மட்டும் ஏற்கனவே அதிகமாயுள்ள சம்பளத்தை இன்னும் அதிகமாகக் கூட்டிக்கொள்வது சரியா என்று கேட்கிறார்கள். நான் ஹரிஜனில் எழுதியிருந்ததை மறுபடியும் வாசித்துப்பார்த்தேன். இந்த நிருபர்கள் விரும்புவதெல்லாம் அதில் அடங்கியிருப்பதாகவே கூறுகின்றேன். ஆயினும் நான் கூறுவதைத் தப்பாக அர்த்தம் செய்துகொள்ளாதிருப்பதற்காக அதை மறுபடியும் விரித்துக் கூற விரும்புகிறேன்.

நான் கராச்சித் தீர்மானத்தைக் குறிப்பிடாததைச் சுட்டிக் காட்டுகிறார்கள். ஆனால் மந்திரிகளுக்குக் குறைந்த சம்பளம் கொடுக்கும் விஷயம் அந்தத் தீர்மானத்தைவிட உயர்ந்ததான காரணத்தையே ஆதாரமாக உடையதாகும். எப்படியாயினும், நான் அறிந்தவரை, காங்கிரஸ் மகா சபை அந்தத் தீர்மானத்தை மாற்றிவிடவே யில்லை. நாம் இன்னும் அதன்படியே நடக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

மந்திரிகளின் சம்பளத்தைக் கூட்டுவதற்குக் காரணமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஆயினும் நான் மந்திரிகளுடைய நிலைமையை அறிந்துகொள்ளாமல் அபிப்பிராயம் கூறி விடலாகாது. என்னைத் தவிர வேறு யாரையும் இன்னவிதமாக நடக்கவேண்டும் என்று சொல்லுவதற்குள்ள அதிகாரம் எனக்குக் கிடையாது என்பதை மறந்துவிடலாகாது. அத்துடன் நான் காரியக் கமிட்டிக் கூட்டங்கள் எல்லாவற்றிலும் ஆஜராயிருப்பதுமில்லை. தலைவர் அழைக்கும்போதுதான் அங்கு போய் என்னுடைய அபிப்பிராயத்தைக் கூறுவேன். அதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் அது ஆதார பூர்வமாகவும் ஆராய்ந்து கூறுவதாகவும் இருத்தல் அவசியம்.

பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கு மிடையிலும் உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும் தாழ்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு மிடையிலும் காணப்படும் வித்தியாசம் அசங்கியமானதாகும். அந்தப் பிரச்னையானது தீர்க்கமாக ஆலோசனை செய்து அடியோடு மாற்றி அமைக்கவேண்டிய முறையோடு சம்பந்தப்பட்டதாகும். அதைச் சில மந்திரிகளுடைய சம்பளங்களையும் அவர்களுடைய காரியதரிசிகளுடைய சம்பளங்களையும் குறைப்பதைக் கொண்டுதீர்த்துவிட முடியாது. இரண்டு விஷயங்களும் அதனதன் பலாபலன்களைக் கொண்டே தீர்மானிக்கப் படவேண்டியவைகளாகும். சம்பளங்கள் விஷயத்தில் மந்திரிகளே சுலபமாக முடிவு செய்துவிடலாம். அவர்கள் தான் அதைச் செய்யவேண்டியது மாகும். ஆனால் மற்ற விஷயமோ அடியோடு மாற்றி யமைக்கவேண்டிய அளவு பெரிய விஷயமாகும். மந்திரிகள் அந்த விஷயத்தைக் காலதாமதமின்றி ஆராய வேண்டும் என்பதையும் தாழ்ந்த உத்யோகங்களில் இருப்பவர்களுடைய சம்பளங்களைப் பரிபூரணமாகப் பரிசீலனை செய்து அவசியமானவர்களுக் கெல்லாம் உயர்வு கொடுக்கவேண்டும் என்பதையும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன்.

புது டில்லி, மோ. க. காந்தி.
31—5—46

## அரசியற் கைதிகள் விடுதலை

மாகாணங்களில் ஜனங்களின் பிரதிநிதியாகவுள்ள மந்திரி சபைகள் ஏற்பட்டிருப்பதால் அரசியற் கைதிகள் எல்லோரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்ப்பது நியாயமே. இந்தக் கைதிகளில் கொலை, தீ வைத்தல், கொள்ளை முதலிய குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றவர்களும் உளர். இவர்களை வீரர்களுக்குச் செய்யும் மரியாதையுடன் வரவேற்கலாமா என்று சிலர் கேட்கிறார்கள்.

அநேக காரணங்களை உத்தேசித்து இத்தகைய குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்வது ஒரு விஷயம். ஆனால் அவர்களை வீரர்களைப் புகழ்வதுபோலப் புகழ்வது வேறு விஷயம். இரண்டுக்கும் சம்பந்தம் கிடையாது. அவர்கள் முன் பின் யோசியாமல் தவறாகவே நடந்துகொண்டவர்கள். பொதுக் காரியத்துக்காக என்று சொல்லிக் கொள்ளையிட்டால் அது கொள்ளை யாகாமற் போகாது. தேசபக்தி என்னும் சிறந்த பெயரால் இத்தகைய காரியங்களை யோசியாமல் புகழ்வது எறிந்த கல் எறிந்தவனுக்கே வந்து சேரும் கவண் போன்றதாகும். இவர்களுடைய செயல்களின் காரணமாக தேசமானது இரட்டிப்பான நஷ்டம் அடைய நேரிட்டு விட்டது. சுதந்திரம் என்றால் குற்றம் செய்யக் கூட உரிமை யிருக்கவேண்டியது தான். ஆயினும் நாமாகவே நம்மை அடக்கிக் கொள்ளாவிட்டால், சுயேச்சை என்பது ஒரு சாபத்தீடாகவே ஆகிவிடும். பொதுஜனங்கள் அவர்களுடைய செயல்களைச் சரி என்று சொல்லுவார்களானால் அது நாம் எதிர்பார்ப்பதற்கு முன்னதாகவே வந்துகொண்டிருக்கிற பரிபூரண சுயேச்சைக்குத் தவறாக ஜனங்களைத் தயார் செய்வதாகவே முடியும்.

மூஸோரி, மோ. க. காந்தி
31—5—46

அச்சடித்தவர்: பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி.டி., சென்னை.
பிரசுரித்தவர் : ஸ்ரீராமன், தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை. நிர்வாக ஆசிரியர் : சின்ன அண்ணாமலை.